பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
13. 01. 2025 7. 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகா கும்பமேளா தொடங்கியதை ஒட்டி திரிவேணி சங்கமத்தில் இன்று காலை லட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடி வருகின்றனர்.

2. லொஹ்ரி பண்டிகையை முன்னிட்டு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் ஆகியோர் மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

3. சத்தீஸ்கட் மாநிலத்தில் 5 நக்சல் தீவிரவாதிகளை சுட்டுக்கொன்ற பாதுகாப்புப் படையினரின் துணிச்சல் மிக்க நடவடிக்கையை அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய் பாராட்டியுள்ளார்.

4. அணு ஆயுத பிரச்சினை தொடர்பாக ஈரானுக்கும் - ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான 3வது சுற்றுப் பேச்சுகள் ஜெனிவாவில் இன்று தொடங்குகின்றன.

5. முதலாவது மகளிர் ஹாக்கி இந்தியா லீக் போட்டியின் முதல் ஆட்டத்தில் ஒடிசா அணி 4-0 என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளா உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் இன்று காலை தொடங்கியது.

கும்பமேளாவை ஒட்டி அங்கு குழுமியுள்ள லட்சக்கணக்கான பக்தர்கள் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இந்த விழா அடுத்த மாதம் 26ஆம் தேதி மகாசிவராத்திரி வரை நடைபெற உள்ளது.

சுமார் 45 கோடி பேர் இந்த கும்பமேளாவில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று மட்டும் சுமார் 50 லட்சம் பக்தர்கள் புனித நீராடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

புனித நீராடுதல் மட்டுமின்றி பிரயாக்ராஜில் உள்ள புகழ்பெற்ற கோவில்களுக்கும் பொதுமக்கள் சென்று வழிபாடு நடத்தி வருகின்றனர்.

கும்பமேளாவை முன்னிட்டு பக்தர்களுக்காக மத்திய அரசும், உத்தரப்பிரதேச மாநில அரசும் பல்வேறு வசதிகளை செய்துள்ளன.

பக்தர்கள் இடையூறு இன்றி செல்லும் வகையில் பிரயாக்ராஜில் சாலைகள் விரிவுபடுத்தப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க பாதுகாப்பு பணியில் ஆயிரக்கணக்கான காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நதிக்கரையோரங்களில் 7 படகுகளுடன் தேசிய பேரிடர் மீட்புப் படையினரும் உத்தரப்பிரதேச மாநில அரசின் காவல்துறையினரும் பக்தர்கள் பாதுகாப்பாக நீராடும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

கும்பமேளாவுக்கு நாடு முழுவதிலும் இருந்து பக்தர்கள் செல்லும் வகையில் ரயில்வே, வழக்கமான 10 ஆயிரம் ரயில்களுடன் மூவாயிரம் சிறப்பு ரயில்களை இயக்கி வருகிறது.

ரயில் நிலையங்களுக்கு வரும் பக்தர்களுக்கு போதுமான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக ரயில்வே வாரிய தலைவர் திரு. சதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்பு கருதி ரயில் நிலையங்களில் 11 ஆயிரத்து 476 கண்காணிப்பு கேமராக்கள் புதிதாக பொருத்தப்பட்டுள்ளதாகக் என்று கூறினார்.

ரயில் பயணிகளுக்காக ரயில் நிலையங்களில் 12 மொழிகளில் அறிவிப்புகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூத்த குடிமக்களுக்காக சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

40 கோடி பக்தர்கள் பிரயாக்ராஜுக்கு வருகை தருவார்கள் என்பதால் 9 ரயில் நிலையங்களில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே வாரியத்தின் மற்றொரு உயரதிகாரியான திரு. திலீப் குமார் கூறினார்.

<<<<>>>>

லொஹ்ரி பண்டிகையை முன்னிட்டு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் ஆகியோர் மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

நாளை கொண்டாடப்பட உள்ள மகரசங்கராந்தி, பொங்கல் மற்றும் பிஹு பண்டிகைகளுக்கும் இருவரும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

இந்த விழாக்கள் நாட்டின் வளமான கலாச்சார பாரம்பரியத்தின் அடையாளங்கள் என்றும், அனைவரது வாழ்விலும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் இப்பண்டிகைகள் ஏற்படுத்துவதாகவும் குடியரசுத்தலைவர் தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படும் இப்பண்டிகைகள் இயற்கையுடன் இணக்கமான உறவை வெளிப்படுத்துவதைக் குறிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், நாட்டிற்கு உணவளிப்பதற்காக அயராது உழைக்கும் விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கும் பண்டிகையாக லொஹ்ரி மற்றும் மகரசங்கராந்தி கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பண்டிகைகள் அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சியையும், செழுமையையும் கொண்டுவரட்டும் என்றும் அவர் வாழ்த்தியுள்ளார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் இன்றும் நாளையும் ஸ்பெயினில் அதிகாரபூர்வ சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

வெளியுறவுத்துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்ற பின்னர் ஸ்பெயின் செல்வது இதுவே முதல் முறையாகும் என்று வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் கூறினார்.

இந்தப் பயணத்தின்போது திரு. ஜெய்சங்கர், ஸ்பெயின் தலைவர்களை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக பேச்சுகள் நடத்த உள்ளார்.

அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Manuel Albares**-ஐ சந்தித்து சர்வதேச நிலைமைகள் மற்றும் பரஸ்பர நலன்கள் தொடர்பாக பேச உள்ளார்.

ஸ்பெயினில் உள்ள இந்திய தூதரக அலுவலகம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சி ஒன்றிலும் திரு. ஜெய்சங்கர் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலத்தில் 5 நக்சல் தீவிரவாதிகளை சுட்டுக்கொன்ற பாதுகாப்புப் படையினரின் துணிச்சல் மிக்க நடவடிக்கையை அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய் பாராட்டியுள்ளார்.

ராய்ப்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைக்கு தாம் வீரவணக்கம் செலுத்துவதாகக் கூறினார்.

கடந்த ஓராண்டாக மாநிலத்தில் பாதுகாப்புப் படையினர் நக்சல் தீவிரவாதத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், தற்போது அது பலனளிக்க தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டுக்குள் நாட்டில் இருந்து முற்றிலுமாக நக்சல் தீவிரவாதம் ஒழிக்கப்படும் என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இலக்கு நிச்சயம் எட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

சத்தீஸ்கட் மாநிலத்தின் பீஜப்பூர் மாவட்டத்தில் நேற்று பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற மோதலில் சுட்டுக்கொல்லப்பட்ட 5 நக்சல் தீவிரவாதிகளில் இருவர் பெண்கள் என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜிதேந்திர யாதவ் கூறினார்.

ஆனால் அவர்களின் உடல் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றும், மோதல் நிகழ்ந்த இடத்தில் இருந்து ஏராளமான தானியங்கி துப்பாக்கிகளும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாசிக் – மும்பை நெடுஞ்சாலையில் நேற்றிரவு ஏற்பட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிந்தனர்.

மேம்பாலம் ஒன்றில் ஏற்பட்ட இந்த சாலை விபத்தில் காயமடைந்த 5 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அதில் 2 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழகத்தில் ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் ஏலகிரி மலையை பல்வேறு வசதிகளுடன் கூடிய சுற்றுலாத்தலமாக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் நேற்று மாலை செய்திமக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசுப் பொருட்காட்சியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மாவட்டத்தில் பொழுதுபோக்கு பூங்கா அமைப்பதற்கு தகுந்த இடத்தை மாவட்ட நிர்வாகம் தேர்வு செய்து அளித்தால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

அணு ஆயுத பிரச்சினை தொடர்பாக ஈரானுக்கும் - ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான 3வது சுற்றுப் பேச்சுகள் ஜெனிவாவில் இன்று தொடங்க உள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஈரான் அணுசக்தி விவகாரம் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளின் வெளியுறவுத்துறை அதிகாரிகள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கிறார்கள்.

ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் தொடர்ச்சிதான் இது என்றும், அணுசக்தி திட்டம் குறித்து மேற்கத்திய நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக ஏற்கனவே பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

ஈரானிடம் தற்போது 170 கிலோ கிராம் யுரேனியம் இருப்பதாகவும், தொடர்ந்து அந்நாடு யுரேனிய செறிவூட்டலை மேற்கொண்டு வருவதாகவும் சர்வதேச அணுசக்தி முகமை தெரிவித்திருந்தது.

<<<<>>>>

குரோஷியா அதிபராக திரு. **Zoran Milanovic** மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதிபர் தேர்தலில் பதிவான மொத்த வாக்குகளில் அவர் 74 புள்ளி 6 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. **Dragan Primorac** 25 புள்ளி 3 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இறுதி முடிவுகள் இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

முதலாவது மகளிர் ஹாக்கி இந்தியா லீக் போட்டி நேற்று ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் தொடங்கியது.

முதல் போட்டியில் ஒடிசா அணி 4-0 என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்றது.

இன்று நடைபெறும் போட்டியில் பெங்கால் அணி – சூர்மா அணியை எதிர்கொள்கிறது.

ரவுர்கேலாவில் நடைபெற்று வரும் ஆடவர் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் ஹைதராபாத் அணி 5-1 என்ற கோல் கணக்கில் கலிங்கா அணியை வென்றது.

இன்றிரவு 8.15க்கு நடைபெறும் போட்டியில் தமிழ்நாடு அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

--------------

வரும் 19ஆம் தேதி வரை நடைபெற இந்தப் போட்டியில் 20 ஆடவர் அணிகளும், 19 மகளிர் அணிகளும் பங்கேற்கின்றன.

இந்தியாவைத் தவிர நேபாள், பெரு, பிரேசில், பூடான், மலேசியா, ஈரான், கொரியா உள்ளிட்ட நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

**<<<<The End>>>>**